## மக்களின் ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்குகிறது,

# அமுதா ஐ.ஏ.எஸ். தலைமையில் செயல்படும் ‘முதல்வரின் முகவரி’ துறை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் — சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மே 6 -

“முதல்வரின் முகவரி துறை” குறித்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், “அமுதா ஐ.ஏ.எஸ். அவர்களது தலைமையில் மக்களின் குறைகளைக் களைந்து - ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்குகிறது, ‘முதல்வரின் முகவரி துறை’ என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் வலைதளப்பதிவு வருமாறு:-

**மக்களால் எளிதில் அணுகக்கூடிய எல்லோருடைய குறைகளையும் காது கொடுத்துக் கேட்டுத் தீர்வு காணக் கூடிய நமது திராவிட மாடல் அரசில், எனது நேரடிக் கட்டுப்பாட்டில், அமுதா இ.ஆ.ப., அவர்களது தலைமையில் மக்களின் குறை களைக் களைந்து ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்கு கிறது ‘முதல்வரின் முகவரி துறை’!**

**பொதுமக்கள் இந்தத் திட்டத்தினைச் சிறப்புறப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வேலூர் மாவட்டக் கழகம் சார்பில்

# 35 சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களை சிறப்பாக நடத்த முடிவு!

## மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்: ஏ.பி.நந்தகுமார் அறிவிப்பு!



வேலூர், மே 6 -

வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் அமைப்புசாரா ஓட்டுநர்அணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம். கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாவட்டப் பொருளாளர் நரசிம்மன், மாவட்ட துணை செயலாளர்கள் டாக்டர்பிரபாத் குமார்,ஜி.எஸ். அரசு, தலைமைச்செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, ஏ.ஜி.ஆறுமுகம், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் துணை மேயர் எம். சுனில் குமார் , தொகுதி பொறுப்பாளர் மாலிக் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய ,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு;

இந்திய ஒன்றியத்திற்கே ரோல் மாடலாக அதாவது இந்திய ஒன்றிய முதல்வர்களிலேயே முன்மாதிரியான திராவிட மாடல் முதல்வராக திகழும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும், துணையாக பக்க பலமாக இருந்து செயலாற்றி வரும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கழக திராவிட மாடல் அரசின் நான்கு ஆண்டு கால சாதனை தொடரட்டும் இது பல்லாண்டு என மக்கள் போற்றும் மக்களாட்சியின் சாதனைகளை மக்கள் மத்தியில் எடுத்துரைக்கும் வண்ணம் வேலூர் மாவட்ட தி.மு.க.வுக்கு உட்பட்ட ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்புகளில் சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள் மே மாதம் 8ம் தேதி முதல் 12ம் தேதி வரையிலான நாட்களில் 35 இடங்களில் கூட்டங்களை நடத்திட உரிய நிர்வாகிகளை கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

எல்லோருக்கும் எல்லாம் என்ற தாரக மந்திரத்தை பின்பற்றி தமிழகத்தில் மக்களாட்சி நடத்தி வரும் ஜனநாயக மரபுகளோடு திராவிட கொள்கை பிடிப்போடு தொடர்ந்து அரசியல் களம்ஆடி இந்திய ஒன்றிய அரசியல் இயக்கங்களிலேயே முதன்மை பெற்ற மக்கள் இயக்கமாக வீரநடை போடும் நமது கழக பொதுக்குழு கூட்டம் எதிர் வரும் ஜூன் 1 தேதியன்று மதுரையில் நடைபெற உள்ளதால், நமது மாவட்டத்திற்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு மாவட்டத்திற்கு நற்பெயரை ஈட்டி தர வேண்டுமாய் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

வருமானத்துறை, அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை தங்களின் பாசிச பா.ஜ.க.வின் கைப்பாவையாக மாற்றி ஜனநாயகத்திற்கு விரோதமாக மக்கள் விரோத ஆட்சியை கொண்டு எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசை மிரட்டி அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க.வை வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

காஷ்மீர் மாநிலம் பஹல்காம் இடத்தில் நிகழ்த்த ப்பட்ட தீவிரவாத தாக்குதலால் பலியான அப்பாவி பொதுமக்களுக்கும், உலக கத்தோலிக்க மறை மக்களின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவிற்கும், அன்னாரை இழந்து வாடும் கத்தோலிக்க கிறிஸ்துவ பெருமக்களுக்கும் வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் கால்பந்தாட்டப் போட்டி!

## டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. பரிசு வழங்கினார்!

வேலூர், மே 6 -

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாள் கால்பந்து போட்டி நடைபெற்றது.

வெற்றி பெற்ற அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் பரிசு வழங்கினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாள் கால்பந்து போட்டி இரண்டு நாட்களாக நடந்து வந்தது. தொடக்க விழாவுக்கு காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. செயலாளர் எம்.சுனில்குமார் தலைமைதாங்கினார் வட்டச் செயலாளர்கள் இளங்கோ’ சம்பந்தம் மாநகராட்சி கவுன்சிலர்கள் ரஜினி, டிடா சரவணன், வட்ட செயலாளர் சசிகுமார் வேலூர் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி. சுரேஷ் குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் கால்பந்து போட்டிகளை தொடங்கி வைத்தார்.

இரண்டாவது நாள் போட்டியை மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார் உட்பட மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 24 அணிகள் கலந்து கொண்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்டி.எம். கதிர்ஆனந்த்கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற காட்பாடி ராயல் பிரதர்ஸ் யுனைடெட் அணிக்கு முதல் பரிசாகரூ.30ஆயிரம் இராணிப்பேட்டை சிப்காட் சரண் அணிக்கு இரண்டாவது பரிசாக 20ஆயிரம், சென்னை ஷாடோஅணிக்கு மூன்றாவது பரிசாக 15,000 காட்பாடி மிசன் காம்பவுண்ட் வாரியார்ஸ்அணிக்கு நாலாவது பரிசாக பத்தாயிரம் மற்றும் கோப்பைகளை வழங்கி பேசினார். காட்பாடி வடக்கு பகுதி செயலாளர்வன்னியராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பூஞ்சோலை சீனிவாசன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரம், எஸ். கே.நவாப் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு,

கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் நரசிம்மன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, மாவட்ட துணை செயலாளர்கள் டாக்டர் பிரசாத் குமார், ஜி.எஸ். அரசு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், தொகுதி பொறுப்பாளர் மாலிக், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.தேவராஜ் மற்றும் ஒன்றிய கழகசெயலாளர்கள், பகுதி செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 06.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | சிவகங்கை | ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## முன்னாள் அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை!

# விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு!



விழுப்புரம்,மே 6-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழக செயற்குழு கூட்டம் எனது (மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி) தலைமையில் இன்று (06.05.2025 செவ்வாய்க் கிழமை ) பிற்பகல் 2 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் , முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

சட்டப்பேரவை உறுப்பினர் - மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் அ.சிவா, மாவட்டக் கழக அவைத் தலைவர் - மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா.கற்பகம் , தலைமை கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் , பொதுக் குழு உறுப்பினர்கள் , ஒன்றிய - நகர - பேரூர் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

இக்கூட்டத்தில் கழக அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்துவது, கழக ஆக்கப் பணிகள் ஆகியவை குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!



## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் , முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற தலைப்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்திடவேண்டும் என்ற அறிவிப்புக்கிணங்க சேலம் மேற்கு மாவட்டதி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக் கூட்டங்கள் பின்வருமாறு நடைபெறும்.

| தேதி | சட்டமன்ற தொகுதி கழக அமைப்பு | கழக பேச்சாளர்கள் |
|---|---|---|
| 8.5.2025 | சங்ககிரி மகுடஞ்சாவடி ஒன்றியம் | திரு.எஸ்.தர்மராஜன் |
| 8.5.2025 | மேட்டூர் மேச்சேரி ஒன்றியம் | திருமதி மு.சி.வித்யாபாரதி |
| 9.5.2025 | எடப்பாடி நங்கவள்ளி ஒன்றியம் | சி.செந்தில்குமார் |
| 9.5.2025 | சங்ககிரி தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | திருமதி மு.சி.வித்யாபாரதி |
| 9.5.2025 | மேட்டூர் கொளத்தூர் ஒன்றியம் | வழக்கறிஞர் திரு.வி.வைத்தியலிங்கம் |
| 10.5.2025 | எடப்பாடி எடப்பாடி ஒன்றியம் | எஸ்.தர்மராஜன் |
| 10.5.2025 | சங்ககிரி சங்ககிரி ஒன்றியம் | சி.செந்தில்குமார் |
| 10.5.2025 | மேட்டூர் மேட்டூர் நகரம் | திருமதி மு.சி.வித்யாபாரதி ரா.கிருத்திகா |
| 11.5.2025 | எடப்பாடி கொங்கணாபுரம் ஒன்றியம் | எஸ்.தர்மராஜன் |
| 11.5.2025 | சங்ககிரி தாரமங்கலம் நகரம் | வழக்கறிஞர் திரு.வி.வைத்தியலிங்கம் |
| 12.5.2025 | எடப்பாடி எடப்பாடி நகரம் | சி.செந்தில்குமார் |
| 12.5.2025 | சங்ககிரி இடங்கணசாலை நகரம் | எஸ்.தர்மராஜன் |

எனவே, இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளைக் கழக வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள் முந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA 2) பூத்கமிட்டி உறுப்பினர்கள்(BLC) கழகநிர்வாகிகள், கழகசெயல்வீரர்கள்மற்றும் பொதுமக்கள் பெறும் திரளாக கலந்து கொள்ள தேவையான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி**
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்



வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடந்த கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றினார். அருகில் தெற்கு பகுதி தி.மு.க. செயலாளர் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பூஞ்சோலை சீனிவாசன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.சி.சுரேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.